# ஹஜ்ஜின் அர்க்கான்கள்

## முதலாவது ருக்னு: இஹ்ராம் அணிதல்

இது ஹஜ், உம்ரா ஆகிய இரண்டு வணக்கங்களை நிறைவேற்ற முற்படுவதற்கான நிய்யத்தாகும். இஹ்ராம் மூன்று வகையானதாகும்:

**ஃகிறான்** இது இஹ்ராம் அணியும்போது ஹஜ் மற்றும் உம்ரா இரண்டிற்கும் ஒன்றாகவே நிய்யத்து செய்துகொள்வதாகும். இதற்காகத் தல்பிய்யா கூறும்போது இரண்டையும் குறிப்பிட்டுக் கூறவேண்டும் (لَبَّيْكَ حَجًّا وَعُمْرَةً).

**தமத்துஉ** இது ஹஜ் நிறைவேற்றும்போது முதலில் உம்ராவுடைய நிய்யத்துடன் இஹ்ராம் அணிந்து அதனை நிறைவேற்றிவிட்டு இஹ்ராம் களைந்து விட்டு, பின்பு துல் ஹிஜ்ஜா 8 ஆம் தேதியன்று மீண்டும் ஹஜ்ஜுக்கான நிய்யத்தடன் இஹ்ராம் அணிந்து ஹஜ்ஜை நிறைவேற்றும் முறையாகும்.

**இஃப்றாது** இது ஹஜ்ஜுக்கான நிய்யத்தடன் மட்டுமே இஹ்ராம் அணிவதாகும்.

ஹரம் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு தமத்து மற்றும் ஃகிரான் வகையிலான இஹ்ராம் அணிவது அனுமதிக்கப்பட்டதல்ல. இந்த மூன்று முறைகளில் அனைத்திலும் சிறப்புக்குரியது முறையே தமத்து, இஃப்ராது அதன் பின் ஃகிரான் முறையாகும்.

www.uzairfalahi.com

## இஹ்ராம் அணியும் ஒழுக்கங்கள்

இஹ்ராம் அணியும் ஒழுக்கங்கள் கீழ்வருமாறு:

1 **குளித்தல்**

2 **முடி வெட்டிக்கொள்ளுதல்** மீசை வெட்டுதல், உடலில் தேவையற்ற உரோமத்தை (அக்குள் மற்றும் மர்ம இடத்திலுள்ள) முடியை மழித்தல், நகம் வெட்டிக்கொள்ளுதல் ஆகியன.

3 **ஆண்கள் தைத்த ஆடைகளை அணியக்கூடாது** இஹ்ராமுடைய இரண்டு போர்வைகளை (துண்டுகள்) அணிதல், பெண்கள் முகத்தை மட்டும் திறந்து வைக்கலாம், இருப்பினும், ஆண்களை எதிர்கொண்டு கடந்து செல்லும் போது முகத்தை மறைத்துக்கொள்ளலாம்.

**4 இஹ்ராம் அணிந்துகொள்வதற்கு முன்பு நறுமணம் பூசுதல்**

**5 ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் தல்பிய்யா கூறுதல்** வாகனத்தில் ஏறும் போது தல்பிய்யா சொல்லவேண்டும், பாதையில் ஏறுமுகமாகவோ இறக்கமாகவோ தாழ்வான பகுதியைக் கடக்கும்போது தல்பிய்யா சொல்லவேண்டும். பெருநாளன்று ஜமராத்தில் கற்களை எறியும் வரை யிலும் தல்பிய்யா அவ்வப்போது சொல்லிக்கொண்டிருக்கவேண்டும், அதன்பின் சொல்லத்தேவையில்லை.

## இஹ்ராம் அணிந்தபின் அனுமதிக்கப்பட்டவை

**1 குளித்தல் மற்றும் இஹ்ராமுடைய இரண்டு துண்டுகளையும் மாற்றுதல்** பெண்கள் தங்கள் பின்னல்களைத் தளர்த்தவும் தலை வாரிக்கொள்ளவும் செய்யலாம், ஆனால், தலைமுடி உதிராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

**2 பெண்கள் தோல் காலுறைகளை அணியலாம்**

**3 நிழல்களில் நிற்கலாம்,** உதாரணமாக குடை, கூடாரம் ஆகியவற்றின் நிழலில் நிற்கலாம், ஆபத்தான காட்டு விலங்குகள், பூச்சிகளைக் கொல்லலாம்

www.uzairfalahi.com

## இஹ்ராம் அணிந்தபின் தடுக்கப்பட்டவை

இஹ்ராம் அணிந்தபின் சில செயல்கள் ஹராமானதாக ஆகிவிடுகின்றன, அவ்வாறு செய்வதனால் இஹ்ராம் அணிந்தது விணாகிவிடுகிறது, உதாரணமாக, உடலுறவு கொள்ளுதல். மேலும், சில செயல்களும் செய்வது தடுக்கப்பட்டுள்ளது, அவ்வாறு எவரும் செய்துவிட்டால் அதற்காக ஃபித்யா கொடுப்பது வாஜிபாகிவிடும், அது ஒரு ஆடு ஃகுர்பானி கொடுப்பது அல்லது 60 ஏழைகளுக்கு உணவளிப்பது அல்லது மூன்று நாட்கள் நோன்பு நோற்பது ஆகிய ஏதோ ஒன்றின் மூலம் செய்யப்படும். இவ்வகையில், அவருடைய ஹஜ் நிறைவேறிவிடும். தடுக்கப்பட்ட செயல்கள் கீழ்வருமாறு:

**1 உடம்பின் எந்த பகுதியிலிருந்தும் முடியை மழித்தல் அல்லது வெட்டுதல், நகங்களை வெட்டுதல்** அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَلَا تَحۡلِقُواْ رُءُوسَكُمۡ حَتَّىٰ يَبۡلُغَ ٱلۡهَدۡيُ مَحِلَّهُۥۚ ﴿١٩٦﴾ البقر 96 )

*பொருள்: பலிப் பிராணி தனக்குரிய இடத்தைச் சென்றடையும் வரை உங்கள் தலைமுடியை மழிக்காதீர்கள் (அல் பஃகரஹ்:196)*

2 **ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல், பெண்கள் கையுறைகளை அணிதல் அல்லது முக்காட்டினால் முகத்தை மறைத்துக்கொள்ளுதல்** இருப்பினும், அந்நிய ஆண்கள் உடனிருக்கும்போது பெண்கள் தன்னுடைய முக்காட்டினால் முகத்தை மறைத்துக்கொள்ளலாம். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நாங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடன் இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்தோம், மக்கள் தங்கள் வாகனங்களில் சென்றுகொண்டிருப்பார்கள், அவர்கள் எங்களுக்கு அருகாமையில் கடந்துசெல்லும்போது நாங்கள் முக்காட்டினால் எங்கள் முகங்களை மறைத்துக்கொள்வோம், அவர்கள் சென்றுவிட்டபின் முக்காட்டினை அகற்றிவிடுவோம் (அபூ தாவூத், இப்னு மாஜா)

3 **ஆடைகள் அல்லது உடம்பின்மீது நறுமணம் பூசிக்கொள்ளுதல், சாயம் போடப்பட்ட நறுமணம் வீசும் துணிகளை அணிதல்.**

4 **தரைவாழ் பிராணிகளை வேட்டையாடுதல் அல்லது மற்றவர்கள் வேட்டையாடுவதற்கு அவற்றைச் சுட்டிக்காட்டுதல், அதன் மாமிசத்தை உண்ணுதல்.** இருப்பினும், கடலில் வேட்டையாடுவது கூடும். இஹ்ராம் அணிந்த நிலையில் எவரும் தரையில் ஒரு விலங்கை வேட்டையாடினால் அதற்கான கஃப்பாரா கொடுக்கவேண்டியிருக்கும். இவ்வாறே, ஹரம் எல்லைக்குள் செடிகள் மற்றும் மரங்களை வெட்டுவது ஹராமானதாகும்.

5 **நிகாஹ் செய்துகொள்ளுதல், நிகாஹ் செய்து கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தல்.** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا يَنْكِحُ الْمُحْرِمُ، وَلَا يُنْكَحُ، وَلَا يَخْطُبُ (مسلم)

*பொருள்: இஹ்ராம் அணிந்த ஒருவர் நிகாஹ் செய்துகொள்ளக் கூடாது, இஹ்ராமிலுள்ளவரை நிகாஹ் செய்துகொடுக்கவும் கூடாது, நிகாஹ் செய்துகொள்ளும் விருப்பத்தைத் தெரிவிக்கவும்கூடாது. (முஸ்லிம்).*

6 **இச்சையுடன் மனைவிக்கு முத்தமிடுதல், அவளைத் தொடுதல் மற்றும் உடலுறவுக்கான இச்சை உண்டாக்கும் அனைத்தும்** இவ்வகையில், பாவமான, குற்றச்செயல்கள் மற்றும் மானக்கேடான செயல்கள் அனைத்துமே இதில் அடங்கும் என்ற வகையில் இஹ்ராம் அணிந்த நிலையில் அவற்றைத் தவிர்க்கவேண்டும்.

* * *

www.uzairfalahi.com